மின் ஆக்கிகள். அதாவது ஜெனரேட்டர்ஸ் மிக அதிக அளவில் உபயோகப்படுத்தப்பட்டதால், டீசல் நுகர்வும். அதாவது டீசல் கன்சம்சனும் அதிகரித்து, பல பிரச்சினைகளுக்கு வழி வகுத்தது, இயற்கை ஒரு புறம் உதவாத நிலையில், மற்றொரு புறம் அனல் மின் நிலையங்களை இயக்குவதற்குத் தேவையான நிலக்கரி கிடைக்காது ஓரிரு நாட்களுக்கு மட்டுமே நிலக்கரி கையிருப்பு உள்ள அவல நிலை இருந்தது,

மக்கள் நலனில் தீவிர ஆர்வம் கொண்ட இந்த அரசு எடுத்துக்கொண்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக, இந்நிலை தற்போது முற்றிலும் மாற்றப்பட்டு ஒரு மாதத்திற்குத் தேவையான நிலக்கரி நம் கைவசம் தாராளமாக உள்ளது,

முற்பகல் 10—55

எண்ணூர், தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்கள் இந்த அரசு எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக தற்போது நல்லமுறையில் இயக்கப்பட்டு தங்களுடைய முழுமையான உற்பத்தித் திறனை எட்டியுள்ளன, புனல் மின் சக்தி நிலையங்களும் சிறந்த முறையில் தங்கள் முழு உற்பத்தித் திறன் அளவுக்கு மின் உற்பத்தி செய்யத் தேவையான நீரையும் இயற்கை நமக்கு ஒரு வரப்பிரசாதமாக இந்த ஆண்டு அளித்துள்ளது, நாங்கள் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகளின் பலனாக சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மின் உற்பத்தி சுமார் 10 விழுக்காடு உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி),

மின் உற்பத்தியில் நாங்கள் எடுத்துக்கொண்ட ஆக்க பூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக மின் வினியோகத்தில் தற்போது அமலில் உள்ள மின் சுமையில் 10 விழுக்காடு மின் வெட்டையும் பவர் கட்டையும் இன்று முதல் முழுமையா நீக்க ஆணையிட்டுள்ளேன், (மேசையைத் தட்டும் ஒலி), தமிழகத்தின் சரித்திரத்தில் இது ஒரு மாபெரும் திருப்புமுனையாகும் (மேசையைத் தட்டும ஒலி), கோடை காலத்தில் மின் வெட்டு அதிகரிக்கப்படும் என்று அறிவிப்புகளை எதிர் பார்த்த தமிழக மக்களுக்கு மின் வெட்டே இல்லை என்ற இந்தச் செய்தி தேனாக இனிக்கும் என நான நம்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி),

4, கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்பு திரு. சி. ஞானசேகரன் இருக்கையில் இல்லை.